1972 ஆகஸ்ட் 22]

பொறுப்பதிகாரிக்கும் அரசு ஆணையிட்டுள்ளது. பள்ளிகளுக்கு அருகில் விற்கப்படும் மிட்டாய்கள், வண்ண ஐஸ் முதலியவை உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியவையும், தடை செய்யப்பட்டவையுமான நிறமூட்டும் பொருள்களைக் கொண்டிருப்பதால் அவற்றை வாங்கி உண்ணவேண்டாமென்று பள்ளி மாணவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமென்று பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அரசு ஆணையிட்டுள்ளது. தின்பண்டங்களைச் சரியான முறையில் மூடப்படாத பாத்திரங்களிலும் வண்டிகளிலும் வைத்து கல்வி நிறுவனங்களுக் கருகில் விற்பனை செய்பவர்களை அவ்வாறு விற்பனை செய்ய அனுமதிக்கக் கூடாது என்ற கட்டளைகள் பிறப்பிக்குமாறு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, ஐஸ் போன்ற பொருள்களை, சுகாதாரக் குறைவான சூழ்நிலையில் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் வியாபாரம் செய்கின்றவர்களைத் தடுப்பதற்கு, பஞ்சாயத்து யூனியன் சுகாதார ஆய்வாளர் அப்படி விற்பவர்களைப் பிடிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன். இதில் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அரசு ஆணை பிறப்பிக்கும்போது, அது முதலில் மேல் மட்டத்திற்குப் போய்ச் சேருகிறது. பிறகு அங்கிருந்து கீழ் மட்டத்திற்குப் படிப்படியாக அனுப்பப்படுகிறது. இப்படிப் பட்ட ஆணைகள் கீழ் மட்டத்திற்கு வரும் நிலையில் அந்த ஆணையைப் பெறுபவர்கள் மட்டுமின்றி, மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டவர்கள், ஒன்றியத் தலைவர்கள் போன்றவர்கள் உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய பண்டங்களைச் சாப்பிடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களையும் மக்களுக்குச் சுட்டிக்காண்பித்து இந்தத் தவறுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, இப்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை.

Family Planning Scheme

*188. Q—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether any dummy

notes of the denomination of five rupee and the like were printed and circulated for the propagation of Family Planning Scheme in Tamil Nadu?

குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்ப ஐந்து ரூபாய் போன்ற நோட்டுகள் அச்சிடப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றிய குறிப்பு அடங்கிய ஐந்து ரூபாய் நோட்டுப் போன்ற விளம்பரங்கள், தமிழ்நாட்டில் ஐந்து காசுக்கு ஒன்று என விற்பனை செய்யப்பட்டதாக அரசுக்குத் தகவல் கிடைத்தது. அதன் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட நோட்டு போன்ற காகிதங்களைத் தனிப்பட்டவர்கள் யார் அச்சடித்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பல்வேறு வண்ணங் களிலே அழகாக அச்சடிக்கும் ஆற்றல்பெற்ற நான்கைந்து அச்சகத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளுக்கு விற்கப்படும் பொருள்களோடு, பல சினிமா நடிகர்களுடைய படங்களைக் கொண்ட இந்த நோட்டுகள் போன்ற காகிதங் களை விநியோகித்ததாகத்தான் செய்தி இருக்கிறது. அவர்கள் இவற்றைக் கொண்டு ஐந்து ரூபாய்நோட்டுகள் என்று ஏமாற்றுவதற்காக அச்சிட்டதாகத் தெரியவில்லை. அவற்றின் தோற்றம் அப்படி இருந்ததே தவிர, அடிக்கப் பட்டுள்ள படங்களைப் பார்த்தால் யாரும் அவற்றை ஐந்து ரூபாய் நோட்டுகள் என்று எண்ணிவிட முடியாது, அவற்றை இரண்டு காசு, ஐந்து காசு என்று நடைபாதைகளில் போட்டு விற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி மேலும் புலனாய்வு நடைபெற்று, இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடை பெறக் கூடாது என்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்த மான இந்த நோட்டுக்கள் குழந்தைகளுக்கு விற்கப்படாமலிருப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பெரும்பாலும் பெற்றோர்களுக்கு இனி குழந்தைகள்தான் இப்படிப்பட்ட அறிவுரைகளைத்தர வேண்டும்.

Circuit Breakers at Neyveli

*189. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was any accident of the circuit breakers at Neyveli about October, 1971;

(b) if so, whether there were casualties; and

(c) the details thereof?

மின்னோட்டத் தடைப் பொறி, நெய்வேலி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் அளவில், நெய்வேலியில், மின்னோட்ட தடைப் பொறிகளினால் விபத்து ஏதேனும் நேர்ந்ததா?

(இ) ஆமெனில், அது காரணமாக யாராவது இறந்து விட்டார்களா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) நெய்வேலியில் 4—10—1971-ம் நாள் காலை 3-15 மணியளவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தைச் சேர்ந்த அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் திறனுள்ள 7-வது பிரிவின் 3.3 கிலோ இணைப்பில் விபத்து ஒன்று ஏற்பட்டது.

(இ) & (உ): அறுவர் காயமுற்றனர். இவர்களில் முதலாள் (Foreman) பதவி வகிக்கும் திரு. தேவராஜ் என்பவர் நெய்வேலி, அரசு மருத்துவ மனையில் 9—10—1971-ம் நாள் இறந்தார். மற்றவர்கள் அனைவரும் சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டனர். அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்தனர்.